## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள் – ரூ.3 கோடி மதிப்பீட்டில் - 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.15,000/- மானியத்தில் நீர்ப் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்கிட நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன .

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ.தி)துறை

அரசாணை (நிலை) எண். 101

நாள்:06.12.2021

பிலவ வருடம், கார்த்திகை 20 ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:-

தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதஎண்.ஜி1/1730/2021. நாள் 29.09.2021.

*******

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள் :-

***"1300 ஆதிதிராவிடர் மற்றும் 700 பழங்குடியின விவசாயிகள் தங்கள் வேளாண் நிலத்தில் நீர்ப் பாசனத்திற்கு பயன்படுத்தும் பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்கு தலா ரூ. 15,000/- மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவினம் ரூ.3.00 கோடி."***

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான, மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் பயன் பெறும் வகையில், ஆதி திராவிடர் இனத்தை சேர்ந்த 1300 விவசாயிகள் மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த,

700 விவசாயிகள், தங்கள் வேளாண் நிலத்தில் நீர் பாசனத்திற்காக தேவைப்படும் பிவிசி குழாய்களை (PVC Pipes) வாங்குவதற்கு, ஒரு விவசாயிக்கு மானியமாக ரூ.15,000/- வீதம், 2000 விவசாயிகளுக்கு மானியமாக ரூ 3 கோடி தாட்கோ மூலம் விடுவிக்கலாம் என்றும், ஆதி திராவிடர் விவசாயிக்கு விடுவிக்கப்படும் ரூ.15000/- மானியத்தில் ரூ 10,000/- நிதியினை ஒன்றிய அரசின் PMAJAY (SCA to SCP ) திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியிலிருந்தும், எஞ்சிய தொகை ரூ.5000/- மாநில அரசின் நிதியிலிருந்து மானியமாக விடுவிக்கலாம் என்றும், இதே போன்று, பழங்குடியினர் விவசாயிகளுக்கான மானியம் முழுவதையும் மாநில அரசின் நிதியிலிருந்து விடுவிக்கலாம் என்றும் தெரிவித்து அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மேலும், 2021-2022-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் மொத்தத் தொகை ரூ.3 கோடியில், ரூ.1,30,00,000/-ஐ ஒன்றிய அரசின் PMAJAY (SCA to SCP) திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும், எஞ்சிய ரூ.1,70,00,000/-ஐ மாநில அரசின் நிதியிலிருந்து விடுவிக்கலாம் எனவும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான, தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், தாட்கோ, மேலாண்மை இயக்குநரின், கருத்துருவினை ஏற்று. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த 1300 விவசாயிகளுக்கும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த 700 விவசாயிகளுக்கும், நீர் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்கு, ஒரு விவசாயிக்கு ரூ 15,000/- மானியம் வீதம், 2000 விவசாயிகளுக்கு, மானியமாக ரூ.3 கோடி தாட்கோ மூலம் விடுவிக்க நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது . மாவட்ட வாரியான பயனாளிகளின் விவரங்கள் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் இத்திட்டத்தினை உரிய வழிகாட்டு முறைகள் (Guidelines) வகுத்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி-4 இல் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ரூ.3 கோடி தொகையில், ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1300 விவசாயிகளுக்கான ரூ.1.30 கோடி செலவினத்தை, மத்திய அரசின், PM-AJAY(SCAtoSCP) திட்ட நிதியிலிருந்து விடுவித்திடவும், எஞ்சிய ரூ.65 இலட்சம் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 700 விவசாயிகளுக்கான ரூ.1.05 கோடி செலவினம்,

ஆக மொத்தம் ரூ.1.70 கோடியை மாநில நிதியிலிருந்தும் விடுவித்திடும் வகையில், உரிய கருத்துருவினை, பயனாளிகளை தெரிவு செய்த பின்னர் அரசுக்கு அனுப்புமாறு, ஆதி திராவிடர் நல ஆணையர் / பழங்குடியினர் நல இயக்குநர் / தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுகொள்ளப் படுகிறார்கள் .

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43947/ நிதி (ஆதி(ம )பந) /2021, நாள் 03.11. 2021 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.
மேலாண்மை , இயக்குநர் , தாட்கோ , சென்னை -18.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
(ஆதிதிராவிடர் நலம் ஆணையரகம் வழியாக).
அனைத்து மாவட்ட மேலாளார் , தாட்கோ, (தாட்கோ வழியாக).
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை -5 / 9.
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்).
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.

நகல் :-
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல முதன்மைச்செயலாளரின்
தனிச் செயலாளர் , சென்னை-9.
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு -1/ ஆதிந -5 / ப.மே 1) த் துறை , சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவ... 6/11/2021
பிரிவு அலுவலர்

## இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.101, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉ_தி)துறை, நாள்.06.12.2021

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் வழங்கும் திட்டம்.

| வ. எண். | மாவட்டம் | மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பயனாளிகளின் விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| | | SC | | ST | |
| | | Phy. | Grants | Phy. | Grants |
| 1. | அரியலூர் | 30 | 450000 | 10 | 150000 |
| 2. | சென்னை | 0 | 0 | 0 | 0 |
| 3. | கோயம்புத்தூர் | 40 | 600000 | 10 | 150000` |
| 4. | கடலூர் | 55 | 825000 | 15 | 225000 |
| 5. | தருமபுரி | 35 | 525000 | 40 | 600000 |
| 6. | திண்டுக்கல் | 45 | 675000 | 40 | 600000 |
| 7. | ஈரோடு | 40 | 600000 | 20 | 300000 |
| 8. | காஞ்சிபுரம் | 60 | 900000 | 30 | 450000 |
| 9. | * செங்கல்பட்டு | | | | |
| 10. | கன்னியாகுமரி | 20 | 300000 | 10 | 150000 |
| 11. | கரூர் | 30 | 450000 | 10 | 150000 |
| 12. | கிருஷ்ணகிரி | 35 | 525000 | 20 | 300000 |
| 13. | மதுரை | 40 | 600000 | 10 | 150000 |
| 14. | நாகப்பட்டினம் | 50 | 750000 | 15 | 2250000 |
| 15. | * மயிலாடுதுறை | | | | |
| 16. | நாமக்கல் | 30 | 450000 | 30 | 450000 |
| 17. | நீலகிரி | 30 | 450000 | 20 | 300000 |
| 18. | பெரம்பலூர் | 30 | 450000 | 10 | 150000 |
| 19. | புதுக்கோட்டை | 40 | 600000 | 10 | 150000 |
| 20. | இராமநாதபுரம் | 30 | 450000 | 10 | 150000 |
| 21. | சேலம் | 50 | 750000 | 60 | 900000 |
| 22. | சிவகங்கை | 30 | 450000 | 10 | 150000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | தஞ்சாவூர் | 40 | 600000 | 10 | 15000 |
| 24. | தேனீ | 40 | 600000 | 20 | 300000 |
| 25. | திருவள்ளூர் | 50 | 750000 | 20 | 300000 |
| 26. | தூத்துக்குடி | 30 | 450000 | 10 | 150000 |
| 27. | திருநெல்வேலி | 50 | 750000 | 20 | 300000 |
| 28. | * தென்காசி | | | | |
| 29. | திருப்பூர் | 40 | 600000 | 20 | 300000 |
| 30. | திருவண்ணாமலை | 70 | 1050000 | 60 | 900000 |
| 31. | திருவாரூர் | 40 | 600000 | 10 | 150000 |
| 32. | திருச்சிராப்பள்ளி | 45 | 675000 | 30 | 450000 |
| 33. | வேலூர் | 65 | 975000 | 50 | 750000 |
| 34. | * திருப்பத்தூர் | | | | |
| 35. | * இராணிப்பேட்டை | | | | |
| 36. | விழுப்புரம் | 80 | 1200000 | 60 | 900000 |
| 37. | * கள்ளக்குறிச்சி | | | | |
| 38. | விருதுநகர் | 30 | 450000 | 10 | 150000 |
| | மொத்தம் | 1300 | 1,95,00,000 | 700 | 1,05,00,000 |

* புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, பழைய மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கேற்ப பயனாளிகள் தேர்வு செய்து நிதி பகிர்ந்தளிக்கும்படி தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6/12/2021

பிரிவு அலுவலர்

6/12/21